டிஜிட்டல் டெய்லி
# அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண்
ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 17.07.2026 வெள்ளிக்கிழமை | பக்கங்கள் 28 | RNI No.TNTAM/2012/49602 | Vol.14, Issue : 025 - Madurai | Online Edition

# பல்லுயிர்ப் பெருக்கத்தைப் பாதுகாப்பதும், பெண் தொழில் வல்லுநர்களுக்கு அதிகாரம் அளிப்பதும் ஆயுர்வேத மருத்துவமுறையின் எதிர்காலத்திற்கு இன்றியமையாதவை

## குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு உரை

புது தில்லி, ஜூலை 16

ஆயுர்வேத அறுவை சிகிச்சை குறித்த மூன்று நாள் சர்வதேசக் கருத்தரங்கை புது தில்லியில் உள்ள அகில இந்திய ஆயுர்வேத நிறுவனத்தில் குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு தொடங்கி வைத்தார்.

மத்திய ஆயுஷ் அமைச்சகத்தின் கீழ், அகில இந்திய ஆயுர்வேத நிறுவனத்தால் சுஷ்ருத ஜெயந்தியை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்தக் கருத்தரங்கில், இந்தியா, வெளிநாடுகளைச் சேர்ந்த புகழ்பெற்ற அறுவை சிகிச்சை நிபுணர்கள், ஆராய்ச்சியாளர்கள், கல்வியாளர்கள், கொள்கை வகுப்பாளர்கள் பங்கேற்றனர்.

இந்நிகழ்வில், குடியரசுத் தலைவர், அகில இந்திய ஆயுர்வேத நிறுவனத்தில் உள்ள அதிநவீன, செயற்கை நுண்ணறிவு வசதி கொண்ட 3 டெஸ்லா ஹை-ஃபீல்ட் எம்.ஆர்.ஐ. வசதியைத் திறந்து வைத்தார். மேலும், ஆயுர்வேதப் பெண் பட்டதாரிகளின் தொழில் வாழ்க்கை மதிப்பீடு குறித்த ஒரு ஆய்வு என்ற தலைப்பில், இந்திய மருத்துவ முறைக்கான தேசிய ஆணையம் வெளியிட்ட ஆய்வறிக்கையும் வெளியிடப்பட்டது.

இந்தக் கருத்தரங்கில் உரையாற்றிய குடியரசுத் தலைவர், ஆச்சார்ய சுஷ்ருதரின் பங்களிப்புகள், அறிவியல் ரீதியிலான மேம்பாட்டிற்கு அடித்தளம் அமைந்துள்ளன என்று கூறினார். உலகில் உள்ள முறையான அறுவை சிகிச்சை நடைமுறைகள், ஆயுர்வேதத்தின் முழுமையான சுகாதார அணுகுமுறை

ஆகியவை நவீன சுகாதாரப் பராமரிப்பில் தொடர்ந்து முக்கியத்துவம் வாய்ந்தவையாக உள்ளன என்று அவர் தெரிவித்தார்.

ஆயுர்வேத மருத்துவத்தின் நிலையான வளர்ச்சிக்கு பல்லுயிர்ப் பாதுகாப்பு அவசியம் என்றும், அறிவியல் ரீதியான சரிபார்ப்பு முறைகள் மூலம், பாரம்பரிய அறிவை வலுப்படுத்தும் அதே வேளையில், மருத்துவத் தாவரங்கள் கிடைப்பதை உறுதி செய்ய வேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார்.

ஆயுர்வேதப் பணியாளர்களில், அதிக அளவிலானப் பங்களிப்புக்கு பெண்கள் முன்வர வேண்டும் என்று குடியரசுத் தலைவர் அழைப்பு விடுத்தார்.

மேலும், பெண் தொழில் வல்லுநர்கள் நீண்டகால தொழில் வாழ்க்கையை உருவாக்கு வதில் உள்ள சவால்களை எதிர் கொள்வதற்கு ஒருங்கிணைந்த முயற்சிகளை மேற்கொள்ளு மாறு அவர் கேட்டுக்கொண்டார்.

உலகளவில் ஆயுர்வேத மருத்துவத்தை ஊக்குவித்ததற்காக மத்திய ஆயுஷ் அமைச்சகத்தைப் பாராட்டிய அவர், பாரம்பரிய அறிவை மேம்பட்ட தொழில்நுட்பங்கள், நவீன நோயறிதல், அறிவியல் ஆராய்ச்சிகளுடன் ஒருங்கிணைப்பது இந்த அமைப்பின் நோக்கத்தையும், நம்பகத்தன்மையையும் விரிவு படுத்துகிறது என்று கூறினார்.

சௌஷ்ருதம் 2026 போன்ற முயற்சிகள், சான்றுகள் அடிப்படையிலான நடைமுறையை மேலும் வலுப்படுத்தி, ஆயுர்வேத மருத்துவ முறையின் உலகளவிலான அணுகு முறையை மேம்படுத்தும் என்று திரௌபதி முர்மு நம்பிக்கை தெரிவித்தார்.




agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# ஆடிப்பட்டம் சாகுபடிக்கு விதைப்பரிசோதனை செய்வீர்!



பெரம்பலூர், ஜுலை 16

பெரம்பலூர் மற்றும் அரியலூர் மாவட்டத்திற்கான விதை பரிசோதனை நிலையமானது பெரம்பலூர் புதிய பேருந்து நிலையத்திற்கு அருகில் மாவட்ட மைய நூலகம் மேற்கு பகுதியில் செயல்பட்டு வருகிறது. இந்த நிலை யத்தில் விதையின் தரம் அறிய நிர்ணய காரணிகளான முளைப்பு திறன், புறந்தூய்மை, ஈரப்பதம் மற்றும் பிற இரககலப்பு ஆகியவை ஆய்வு செய்யப்படு கின்றன. நடப்பாண்டிற்கு (2026-2027) 2667விதை மாதிரிகள் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதுவரை 538 விதை மாதிரிகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. அவற்றில் 25 விதை மாதிரிகள் தரமற்றவை என கண்டறியப்பட்டுள்ளன.

ஆடிப்பட்டம் சாகுபடி செய்ய உள்ள மக்காசோளம், பருத்தி, நெல், சோளம், உளுந்து, கம்பு, பயறுவகை பயிர்கள், வரகு மற்றும் நிலக்கடலை ஆகிய விதைகளின் தரம் நல் விளைச் சலுக்கு ஆதாரம். ஆகவே விவசாயிகள் சாகுபடி செய்யப்பட உள்ள விதை குவியலிருந்து மாதிரி விதைகளை எடுத்து துணிப்பையில் இட்டு விபரத்தாளில் பயிர், இரகம், குவியல் எண் போன்ற விபரங்களுடன் பரிசோதனை நிலையத்தில் ரூ.80/- வீதம் ஒரு மாதிரிக்கு செலுத்தி விதையின் தரத்தினை பரிசோதனை முடிவுகள் மூலம் அறியலாம்.

முளைப்புதிறன் மூலம் வாலிப்பான நாற்றுகள், இயல்பற்ற நாற்றுகள், கடின விதைகள், இறந்த விதைகள் எத்தனை சதவீதம் உள்ளது என்பதனை கண்டறியலாம். முடிவுகள் விவசாயிகளின் முகவரிக்கே அனுப்பி வைக்கப்படும் என்று விதை பரிசோதனை நிலையத்தின் வேளாண்மை அலுவலர்கள் ஆஷாலதா மற்றும் அம்பிகா இணைந்து வெளியிட்ட செய்தி குறிப்பில் தெரிவித்துள்ளனர்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN
JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

**சிறப்புச்சலுகை**



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# மண் வளத்தை காத்து ரசாயன உரங்களை குறைத்து பயிரில் அதிகமாக மகசூல் பெற வேளாண் துறை அறிவுரை



அரியலூர், ஜுலை 16

அரியலூர் மாவட்டத்தில், அரியலூர் வேளாண்மை இணை இயக்குனரின் அறிவுரையின்படி, திருமானூர் வட்டாரத்தில், சன்னாவூர் கிராமத்தில் வேளாண்மை உதவி இயக்குனர் தர கட்டுப்பாடு அக்ரி டாக்டர் ராதாகிருஷ்ணன், தனியார் உர விற்பனை நிலையத்தை தொடங்கி வைத்து சிறப்புரை ஆற்றுகையில் கூறியது, மண் வளத்தை காத்து ரசாயன உரங்களை குறைத்து, ஒருங்கிணைந்த உர மேலாண்மையுடன், சமச்சீர் விகிதத்தில் அனைத்து விதமான இயற்கை உரங்கள் மற்றும் உயிர் உரங்கள் பயன்படுத்தும் போது மண்வளம் காக்கப்படுகிறது. அது மட்டுமல்லாமல் உர செலவு குறைத்து பயிரில் அதிக மகசூல் பெறலாம் என்றார்.

உரங்களின் விலைகள் அவ்வப்போது அதிகரித்து கொண்டு போவதால், விவசாயிகள் உரம் வாங்கும் போது உரம் மூட்டையில் உள்ள அதிகபட்ச விலைக்கி மேல் வாங்காமல் வாங்க வேண்டாம். ரசாயன உரங்களின் விலைகள் மிக அதிக அளவில் இருப்பதால், விவசாயிகள் ஒருங்கிணைந்த உரம் மேலாண்மையுடன், சமச்சீர் விகிதத்தில் அனைத்து வகையான இயற்கை மற்றும் உயிர் உரங்களுடன், குறைவான ரசாயன உரங்களை பயன்படுத்தி, அதிக மகசூல் பெறலாம் மற்றும் மண் வளத்தின் காக்கலாம். உரங்களை வாங்கும் போது, கண்டிப்பாக ஆதார் கார்டு கொண்டு பி ஓ எஸ் இயந்திரம் மூலம் விற்பனை பில் அதில் தங்களின் முகவரி மற்றும் தொலைபேசி என்னுடன் வாங்க வேண்டும். ஆதார் கார்டு இல்லாமல் உரங்கள் வாங்க முடியாது. விவசாயிகள் உரங்கள் மேற்கண்ட உரிமம் பெற்ற உர விற்பனை நிலையங்களில் மட்டுமே உரங்கள் வாங்க வேண்டும்.

விவசாயிகள் யூரியா உரத்தை அதிகமாக பயன்படுத்தக் கூடாது. அடி உரமாக யூரியாவை பயன்படுத்தக்கூடாது. அடி உரமாக காம்ப்ளக்ஸ், ட்ரிபிள் சூப்பர் பாஸ்பேட், டி ஏ பி உரங் களையும் பயன்படுத்த வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் யூரியா உரம் கலைக்கொல்லியுடன் சேர்த்து பயன்படுத்தக் கூடாது அதிக அளவு யூரியாவை பயன்படுத்தும் போது மண்வளம் பாதிக்கப்படும் அது மட்டுமல்லாமல் நிலத்தடி நீர் மாசுபடும் எனவே விவசாயிகள் அதிக அளவு யூரியாவை தவிர்த்து, விவசாயிகள் அவர்களின் பயிர் சாகுபடி பரப்புக்கு ஏற்ற வகையில் மட்டுமே யூரியாவை பயன்படுத்த வேண்டும்.



அதிகபட்சமாக ஒரு ஏக்கருக்கு யூரியா இரண்டு மூட்டைக்கு மேல் பயன்படுத்த வேண்டாம். டிஏபி உரங்களும் அதிக அளவு விவசாயிகள் வாங்க கூடாது. பயிரின் அளவிற்கு தகுந்தார் போல் அடி உரமாக பயன்படுத்தலாம். யூரியா மற்றும் டிஏபிக்கு பதிலாக யூரியா, நானோ டிஏபி விவசாயிகள் பயன்படுத்து வதால், உர செலவு குறைத்து, மண்வளத்தை காத்து, அதிக மகசூல் பெறலாம். வேளாண்மை விரிவாக்க மையத்தில் கிடைக்கக்கூடிய அனைத்து வகையான உயிர் உரங்களையும், அனைத்து வகையான பயிருக்கு ஏற்ற நுண் ஊட்டச்சத்து உரங்களை பயன்படுத்துவதால் பயிருக்கு வழங்கப்படும் உரம் அளவை குறைத்து, மண்ணின் வளம் அதிகரித்து உர செலவு குறைத்து அதிக மகசூல் பெறலாம்சில்லறை உரம் விற்பனையாளர்கள், மொத்த உரம் விற்பனையாளர்களிடம் உரம் வாங்கும் போது, அனுமதி பெற்ற விற்பனை நிலையத்துக்கு இன்வாய் உடன் வாங்கும்போது இன்வாய்ஸில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் உள்ள விற்பனை நிலையத்தில் மட்டுமே உரங்களை இருப்பு வைக்க வேண்டும், வேறு ஒரு உரிமம் பெற்ற நிலையத்தில் இருப்பு வைத்திருந்தால் அது தரக்கட்டுப் பாட்டு சட்டத்தின் படி மீறிய செயலாகும். இப்படி இருப்பதை அறியப்பட்டால் உரிமம் ரத்து செய்யப்படும். அனைத்து உரம் விற்பனையாளர்களும் கண்டிப்பாக ஆதார் கார்டு கொண்டு பிஓஎஸ் பில் போட்டு, விவசாயிகளுக்கு கண்டிப்பாக உரம் வாங்கியதற்கான விற்பனை பில் அவசியம் தர வேண்டும். உரங்கள் விற்பனை செய்யும்போது விற்பனை பில் முகவரி மற்றும் தொலைபேசி நம்பர் இல்லாமல் விற்பனை செய்யப்படுவது, அனுமதி பெறாத இடத்தில் உரம் இருப்பு வைப்பது,

விற்பனை விலைப் பலகை பராமரிக்காமல் இருப்பது அறிந்தால், உரக் கட்டுப்பாட்டு சட்டத்தின் படி நடவடிக்கை எடுக்கப்படும். சில்லரை உரம் விற்பனையாளர்கள் விற்பனை நிலையத்தில் இருப்பு பதிவேடு இருப்பு, பிஓஎஸ் இயந்திரத்தின் இருப்பு, உண்மை இருப்பு, உரங்களின் இருப்பு எப்போதும் சரியாக வைத்திருக்க வேண்டும். விற்பனை பில் கண்டிப்பாக விவசாய முகவரி இல்லாமல் விற்பனை செய்யக்கூடாது. உரம் விற்பனை நிலை யத்தில் உரக்கட்டுப்பாட்டு சட்டத்தின்படி நடக்கவில்லை என்றால், ஆய்வின்போது உரிய நடவடிக்கை எடுத்து உர உரிமம் தற்காலிகமாக ரத்து செய்யப்படும் என்று வேளாண்மை உதவி இயக்குனர் தரக்கட்டுப்பாடு அக்ரி டாக்டர் ராதா கிருஷ்ணன் கூறினார்.

# பயிர் காப்பீடு செய்ய விவசாயிகளுக்கு அழைப்பு!

சேலம், ஜுலை 16

எதிர்பாராத இயற்கை இடர்பாடுகளால் இழப்பு ஏற்படும் பட்சத்தில் விவசாயிகளுக்கு நிதி உதவி வழங்கவும், நிலையான வருமானம் கிடைக்கச் செய்து அவர்களை விவசாயத்தில் நிலைபெற செய்யவும் பிரதம மந்திரி பயிர் காப்பீட்டுத் திட்டம் மத்திய அரசின் புதிய வழிகாட்டுதலின் படி காப்பீடு திட்டத்தில் சேர சேலம் மாவட்டம், வீரபாண்டி வேளாண்மை உதவி இயக்குநர் பா.கார்த்திகாயினி, விவசாயிகளை கேட்டுக்கொண்டுள்ளார்.

வீரபாண்டி வட்டாரத்தில் காரிப் பருவத்தில் 2026-ல் சோளம் பயிருக்கு ஒரு ஏக்கருக்கு பிரிமியத் தொகையாக ரூ.204/-யும், நிலக்கடலைக்கு ஒரு ஏக்கருக்கு ரூ.447/-யும், ஆகஸ்ட் 17 வரையில் பயிர் காப்பீடு செய்யலாம்.

எனவே விவசாயிகள் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்துடன் அடங்கல், நில உரிமை பட்டா, ஆதார் அட்டை நகல் மற்றும் நடப்பில் உள்ள சேமிப்பு வங்கி கணக்கு புத்தகத்துடன் உரிய பிரீமியத் தொகையை தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள், வணிக வங்கிகள் மற்றும் பொது சேவை மையங் களை செலுத்தி பயிர் காப்பீடு செய்து இடர்பாடு ஏற்படும் காலத்தில் பயிர் காப்பீடுத் தொகை பெற்று பயன் பெறலாம் என்று கூறப்பட்டுள்ளது.

Rithvik Pipe

IS 4985 : 2021 CML-6400179610
IS 9537

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம் நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள் ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்றுபெற்ற பைப்புகள் தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்—தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள் அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன் ஏமாற்றமில்லா தயாரிப்பு

### PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

### RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# வேளாண் விஞ்ஞானிகள் மற்றும் அலுவலர்கள் இணைந்து பாதிப்படைந்த நெல் வயலினை பார்வையிட்டனர்



திருவள்ளூர், ஜூலை 16

திருவள்ளூர் மாவட்டம், பூந்தமல்லி வட்டாரம் வேளாண்மைத்துறையின் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை (அட்மா) மாநில விரிவாக்க திட்டங்களுக்கான உறுதுணை சீரமைப்பு திட்டத்தின் மூலம் பூந்தமல்லி வட்டாரத்தில் சொரன்சேரி கிராமத்தில் பாதிப்படைந்த நெல் வயலில் பார்வையிட்டு நெல்லில் பாசி, பாக்டீரியா இலை கருகல் மற்றும் குருத்துப்பூச்சி தாக்குதலுக்கு விளக்கம் தெரிவித்தனர். மேலும் திரூர், குப்பம், வேளாண் அறிவியல் நிலையம், முனைவர் விஜயசாந்தி, பூச்சியியல் துறை, முனைவர் சிவகாமி, உழவியல் துறை, தெய்வேந்திரன், வேளாண்மை உதவி இயக்குனர், திருவள்ளூர், இணைந்து பார்வையிட்டனர்.

நெல்லில் பாசி, பாக்டீரியா இலை கருகல் மற்றும் குருத்துப்பூச்சி தாக்குதலுக்கு மேலாண்மை பூந்தமல்லி வட்டத்தில் உள்ள கிராமங்கள் நெல் வயல் பச்சை பாசிகளினால் பாதிக்கப்பட்டுள்ளன. பொதுவாக அதிக வெப்பம், சூரிய ஒளி மற்றும் அடி உரம் அதிகமாக இடுதல் போன்ற காரணங்களால் இதன் பாதிப்பு அதிகரிக்கின்றது. பச்சை பாசிகளானது நீரின் மேற்பரப்பில் அடர்த்தியாக படர்ந்து பயிர்களுக்கு போதிய பிராணவாயு கிடைப்பதை தடுக்கின்றது.



இதனைக் கட்டுப்படுத்த கோனோ களையெடுக்கும் கருவினை கொண்டு பாசிகளை கலைத்து விடுமாறும் மேலும் அதிக தாக்குதலுக்கு உள்ளான நெல் வயல்களில் 2.5 கிராம் காப்பர் ஹைட்ராக்சைடுயை ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக் கலாம். அல்லது ஏக்கருக்கு 2 கிலோ காப்பர் சல்பேட் 20 கிலோ மணலுடன் கலந்து வயலில் சீராக இடலாம் எனவும் அறிவுறுத்தப்பட்டது.

பாக்டீரியா இலை கருகலுக்கு பெசில்லஸ் சப்டிலிஸ் 5-10கிராம்/லிட்டர் (அ) காப்பர் ஆக்சி குளோரைடு 2கிராம்/ஏக்கர் குருத்துப்பூச்சி கட்டுப்படுத்த அசாடிராக்டின் 0.03% WSP ஒரு ஏக்கருக்கு 1000 மில்லி (அல்லது) ப்ளுபெண்டமைடு 480 றீஎீ ஏக்கருக்கு 40 மில்லி தெளிக்கலாம்.

மேலும் நெல் பயிரில் இயந்திர நடவு செய்வதில் நீர் மேலாண்மை மிகவும் முக்கியமானது. நீர் மறைய நீர் கட்டு இந்த தொழில் நுட்பத்தினால் கோனோவீடர் கருவினை பயன் படுத்துவது எளிது. மேலும் அதிகமாக பூச்சி நோய்களை கட்டுப் படுவதிலும், பாசிகளினால் பாதிப்புகளையும் தடுக்கலாம்.

### இலை செம்பேன்

Propargite (ப்ரணமாம்யஹம்) 1 ml per litre அல்லது Spiromesifen (ஸ்பைரோமெசிபென்) 0.5 ml per litre கலந்து தெளிக்கலாம்.

## நிலக்கடலை பயிரில் உயர் விளைச்சலுக்கு விதை நேர்த்தி அவசியம் : வேளாண்மை இணை இயக்குநர் தகவல்



புதுக்கோட்டை, ஜூலை 16

புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகள் நிலக்கடலைச் சாகுபடியில் உயர் விளைச்சல் பெறுவதற்கு விதை நேர்த்தி செய்வது அவசியம் என வேளாண்மை இணை இயக்குநர் சு.சுந்தரமகாலிங்கம், ஆலோசனை தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பாவது,

### விதைநேர்த்தி

நிலக்கடலை சாகுபடியில் விதை மற்றும் மண் மூலம் பரவும் நோய்களான வேரழுகல், தண்டழுகல் மற்றும் இலைப்புள்ளி நோய் ஆகியவற்றைக் கட்டுப்படுத்திட ஒரு கிலோ விதைக்கு இரண்டு கிராம் கார்பன்டாசிம் 50 சத டபிள்யு.பி. என்ற மருந்தினைக் கொண்டு விதைநேர்த்தி செய்து 24 மணி நேரம் வைத்திருந்து விதைக்க வேண்டும் அல்லது ஒரு கிலோ விதைக்கு

கிராம் டிரைக்கோடர்மாவிரிடி என்ற உயிரியல் பூஞ்சணக் கொல்லி கொண்டு விதைநேர்த்தி செய்து விதைக்க வேண்டும்.

**உயிர் உர விதை நேர்த்தி**

ஒரு ஏக்கருக்கு தேவையான விதையுடன் தலா 50 மிலி திரவ நுண்ணுயிர்களான ரைசோபியம் (நிலக்கடலை) மற்றும் பாஸ்போ பாக்டீரியா கலந்து விதைநேர்த்தி செய்திட வேண்டும். உயிரியல் மருந்து கொண்டு விதைநேர்த்தி செய்யும் விதைகளை இரசாயனப் பூஞ்சணக்கொல்லி கொண்டு விதைநேர்த்தி செய்தல் கூடாது. நிலக்கடலை விதைநேர்த்தி செய்யும் போது விதையின் மேல் தோல் உரியாமல் கவனமாக விதை நேர்த்தி செய்ய வேண்டும். விதையுறையில் பாதிப்பு ஏற்படின் முளைப்புத் திறன் பாதிக்கப்படும்.

**விதைப்பு**

உழவு செய்த பின் ஏர் மூலம் அல்லது களைக் கொத்து கொண்டு விதைக்கலாம். சீரான பயிர் எண்ணிக்கை கிடைக்க விதைப்புக் கருவி அல்லது கொருகொண்டு விதைக்கலாம். விதைக்கும் போது விதைகளை வரிசைக்கு வரிசை 30 செமீ-ம் செடிக்கு செடி 10 செமீ இடைவெளியும் விட்டு நிலத்தில் 4 செ.மீ. ஆழத்திற்கு மிகாமல் விதைக்க வேண்டும்.

**தொழுஉரம்**

நிலக்கடலையில் கூடுதல் மகசூல் பெற ஊட்டச்சத்து மேலாண்மை இன்றியமையாதது. ஒரு ஏக்கருக்கு ஐந்து டன் மட்கிய தொழுஉரம் அல்லது தென்னை நார்க்கழிவு கம்போஸ்ட் உரத்தினை இட்டு நன்கு உழவு செய்ய வேண்டும்.

**இரசாயன உரம்**

மண்ணாய்வு செய்து அதனடிப்படையில் உரமிடுவதே சிறந்தது. மண்ணாய்வு செய்ய இயலாத நிலையில் பொதுப் பரிந்துரையாக இறவைப் பயிருக்கு ஏக்கருக்கு யூரியா 22 கிலோ, சூப்பர் பாஸ்பேட் 125 கிலோ, பொட்டாஷ் 16 கிலோ இடலாம். மானாவாரி எனில் முறையே 11 கிலோ, 62 கிலோ மற்றம் 8 கிலோ இட வேண்டும். சுண்ணாம்பு மற்றம் கந்தகச் சத்துக்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு 80 கிலோ ஜிப்சம் அடியுரமாக இட வேண்டும். உயிர் உரங்கள் கொண்டு விதை நேர்த்தி செய்யாத போது, ஒரு ஏக்கருக்கு தலா 200 மி.லி. ரைசோபியம் (நிலக்கடலை) மற்றும் பாஸ்போ பாக்டீரியா திரவ நுண்ணுயிர்

உரங்களை ஒரு லிட்டர் நீரில் கலந்து அதனை 10 கிலோ நன்கு தூள் செய்யப்பட்ட மட்கிய தொழு உரத்துடன் கலந்து வயலில் சீராகத் தூவ வேண்டும்.



## களைக் கட்டுப்பாடு

நிலக்கடலையை விதைத்தவுடன் நிலத்தில் ஈரம் இருக்கும் நிலையில் களை முளைக்கும் முன் தெளிக்கும் களைக் கொல்லிகளான புளுகுளோரலின் 800 மி.லி., அல்லது பென்டி மெத்தலின் 30 ஈ.சி. 1.3 லிட்டர், இதில் ஏதேனும் ஒன்றை ஒரு ஏக்கருக்கு தெளித்துக் களைகளைக் கட்டுப்படுத்தலாம். களை முளைக்கும் முன் தெளிக்க வேண்டிய களைக் கொல்லியைத் தெளிக்காத நிலையில், களைகளைப் பொறுத்து விதைத்த 20-25ஆம் நாள் களைமுளைத்த பின்னர் தெளிக்கும் களைக் கொல்லிகளான இமாசிதபைர் 10 சத ஈசி என்ற களைக்கொல்லி 300 மி.லி., அல்லது குயிசலோபாப் ஈத்தைல் 5 ஈ.சி. என்ற களைக்கொல்லி 300 முதல் 400 மிலி இதில் ஏதேனும் ஒன்றை ஒரு ஏக்கருக்கு 200 லிட்டர் நீருடன் கலந்து தெளித்துக் கட்டுப் படுத்தலாம். களைக்கொல்லி தெளிக்கவில்லை எனில் விதைத்த 20ஆம் நாளிலும் 45 ஆம் நாளிலும் ஆட்களை வைத்துக் கைக்களை எடுக்க வேண்டும். களைக்கொல்லி தெளிக்கும் போது வயலில் ஈரம் இருப்பதும், கைத்தெளிப்பான் பயன்படுத்து கையில் தட்டை விசிறித் தெளிப்பு முனையைப் பயன்படுத்து வதும், வயலில் பின்னோக்கி நடந்து செல்வதும் இன்றியமை யாதனவாகும்.

## மண் அணைத்து ஜிப்சம் இடுதல்

நன்கு முதிர்ச்சியான பொக்கற்ற காய்களை பெறுவதற்கும், எண்ணெய் சத்துமிக்க நிலக்கடலையினை பெறுவதற்கும் 45வது நாள் இரண்டாம் களை எடுத்து ஏக்கருக்கு 80 கிலோ ஜிப்சம் இட்டு மண் அணைக்க வேண்டும். இதனால் விழுதுகள் நன்கு மண்ணுக்குள் இறங்கி நிலக்கடலை மகசூல் கூடுதலாக கிடைக்கும்.

எனவே புதுக்கோட்டை மாவட்ட நிலக்கடலை சாகுபடி செய்யும் விவசாயிகள் முக்கிய தொழில்நுட்பங்களை கடைப்பிடித்து நிலக்கடலை சாகுபடியில் கூடுதல் மகசூல் பெற்று பயன் பெறுமாறு புதுக்கோட்டை வேளாண்மை இணை இயக்குநர் சு.சுந்தரமகாலிங்கம் ஆலோசனை தெரிவித்துள்ளார்.

# அதிகரித்து வரும் சிறுதானிய சாகுபடி

தமிழகத்தில் சிறுதானிய பரப்பு நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. நம்முடைய பாரம்பரிய உணவான சிறுதானியங்களை மறந்து போய் அரிசி, கோதுமை உணவுக்கு அடிமையாகி விட்டோம். இதனுடைய விளைவால் நாற்பது வயதிலே பல்வேறு நோய்கள் நம்மை தாக்கி மருத்துவமனையின் வாசலில் தவம் கிடக்கிறோம்.




அரிசியில் பெரும்பாலும் மாவுசத்துகளே உள்ளன. இதை உண்பதால் சர்க்கரை நோய் தாக்குதல் பரவலாக உள்ளது. இதில் புரதம், நார்சத்துகள் இல்லாத காரணத்தால் சிறுதானியங்கள் நோக்கி மக்கள் படை எடுத்து வருகின்றனர். இந்த விழிப்புணர்வு ஏற்படுத்திட தான் ஐ.நா சபை 2023ஆம் ஆண்டை சர்வதேச சிறுதானிய ஆண்டாக அறிவித்தது. அன்று முதல் இன்று வரை சிறுதானிய சாகுபடி பரப்பு அதிகரித்து வருகிறது.



**இதோ புள்ளி விபரம்**

1) 2023 - 24 = 23,57,244 ஏக்கர்
2) 2024 - 25 = 23,78,248
3) 2025 - 26 = 24,12,383

2021-22 ஆண்டுடன் 2025-26ஆம் ஆண்டை ஒப்பிடுகையில் 52,105 ஏக்கர் அதிகரித்து உள்ளதாக தரவுகள் உள்ளன.

**சிறுதானியங்களின் மகத்துவம்?**

தமிழர்களின் பாரம்பரிய உணவாக இருந்த சிறு தானியங்கள் இன்று மறந்துபோய் தற்போது பரவலாக எல்லா மக்களும் பயன்படுத்த தொடங்கியுள்ளனர். நெல், கோதுமை ஏகப்பட்ட இராசயன உரங்கள் பூச்சி மருந்துகள் தெளிக்க வேண்டிய நிலை வரும். ஆனால் மழையால் விளையக்கூடிய சிறுதானியங் களுக்கு எவ்வித உரங்களும் பூச்சி மருந்து தேவையில்லை. நஞ்சு இல்லாத உணவாக இன்று மானாவாரியில் விளைகிறது. சிறுதானியங்களான ராகி, கம்பு, சோளம், வரகு, தினை, சாமை, பனிவரகு வளமற்ற நிலங்களில் கூட சாகுபடி செய்யப்படுகிறது.

சிறுதானிய உணவை உண்ட நம்முடைய முன்னோர்கள் 99 வயது வரை ஆரோக்கியமாக வாழ்ந்து வருகின்றனர். சிறுதானி யங்களை மதிப்புக்கூட்டப்பட்ட பொருளாக மாற்றி தோசை, பொங்கல், பாயாசம், வடை, முருக்கு போன்ற பல காரங்கள் செய்து பயன்படுத்தி வருகின்றனர்.

அரசும் சிறுதானிய சாகுபடியை அதிகரிக்க (MILLET MISSION) திட்டத்தின் மூலமாக பல்வேறு மானியங்களை வழங்கி சாகுபடிக்கான பரப்பை அதிகரிக்க உதவுகின்றன. நடப்பாண்டிலும் எல்-நினோ பாதிப்பால் சிறுதானிய சாகுபடி தான் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தகவல் : அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.

# பிரதம மந்திரி பயிர் காப்பீடு திட்டத்தில் அயோத்தியாபட்டிணம் வட்டார விவசாயிகள் பயன்பெற அழைப்பு!

சேலம், ஜூலை 16

சேலம் மாவட்டம், அயோத்தியாபட்டிணம் வட்டாரம், வேளாண்மை உதவி இயக்குனர் ப.சண்முகப்பிரியா வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது,

சேலம் மாவட்டத்தில் எதிர்பாராத மழை, வெள்ளம் மற்றும் வறட்சி போன்ற இயற்கை இடர்பாடுகளால் இழப்பு ஏற்படும் போது விவசாயிகளுக்கு நிதி உதவி வழங்கவும், அவர்களை விவசாயத்தில் நிலைபெற செய்யவும் பிரதம மந்திரியின் பயிர் காப்பீடு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்த வகையில் தற்போது அயோத்தியாபட்டிணம் வட்டாரத்தில் காரீப் பருவத்தில் சோளம், நிலக்கடலை மற்றும் ராகி பயிர் செய்துள்ள விவசாயிகள் பயிர் காப்பீடு திட்டத்தில் இணைந்து பயன் பெறலாம்.

தற்போது ஜூலை முதல் ஆகஸ்ட் மாதம் 17.08.26 கால கெடுவிற்குள் காரிப்பட்டி மற்றும் வலசையூர் பிர்க்காவில் சோளம் பயிரிட்டுள்ள விவசாயிகள் சோளம் பயிருக்கு ஏக்கருக்கு ரூ.204/-ம், நிலக்கடலை பயிருக்கு ஏக்கருக்கு ரூ.447/-ம் மற்றும் அருநூத்துமலை பிர்க்காவில் ராகி பயிரிட்டுள்ள விவசாயிகள் ராகி பயிருக்கு 31.08.26க்குள் ஏக்கருக்கு ரூ.253/-ம் பிரீமியம் செலுத்தி பயிர் காப்பீடு செய்து கொள்ளலாம்.

நில அடங்கல், நில உரிமை பட்டா, ஆதார் எண், வங்கி கணக்கு எண் ஆகிய ஆவணங்களுடன் அருகே உள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம், வணிக வங்கி மற்றும் பொது சேவை மையம் மூலமாக விவசாயிகள் தொகை செலுத்தி பயிர் காப்பீடு செய்து பயன்பெறலாம் என வேளாண்மை அயோத்தியாப்பட்டணம் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் சண்முகப்பிரியா தெரிவித்துள்ளார்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

கல்யாண்
ஜுவல்லர்ஸ்



Toll Free No. 1800 - 4257333

# ஆடிப்பட்ட பயிர் சாகுபடியில் TNAU பூஸ்டர்ஸ் விவசாயிகளுக்கு ஒரு வரப்பிரசாதம்

விருதுநகர், ஜூலை 16

'ஆடிப்பட்டம் தேடி விதை' என்ற பழமொழிக்கேற்ப கோடைக் காலத்தில் கிடைக்கும் மழை நீரைப் பயன்படுத்தி ஆடியில் விதைப்பு செய்தால் பயிர் முளைப்பதிலிருந்து அறுவடை வரை நிலவும் தட்பவெப்பநிலை பயிர்களை நன்கு வளரச் செய்வ தோடு நல்ல விளைச்சல் கொடுக்கும் திறன் உள்ளதாக அமைகிறது. அவ்வப்போது மழைநீர் கிடைப்பதால் நீர்ப்பாசன மேலாண்மையும் எளிதாகின்றது.

பயிர்கள் வறட்சியைத் தாங்கி வளரவும், ஊட்டச்சத்து குறை பாடின்றி செழிப்பாக வளரவும் மற்றும் அதிக மகசூல் தரவும் கோயமுத்தூரிலுள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், பயறு ஒன்டர், நிலக்கடலை ரிச், காட்டன் பிளஸ் மக்காச்சோள மேக்சிம் கரும்பு பூஸ்டர் மற்றும் தென்னை டானிக் போன்றவற்றை வெளியிட்டுள்ளது.

பயறுவகை பயிர்களுக்கு ஒரு ஏக்கருக்கு தேவையான 2.0 கிலோ TNAU பயறு ஒன்டரை தேவையான அளவு தண்ணீர் சேர்த்து பூ பூக்கும் பருவத்தில் இலைவழி மூலம் கைத் தெளிப்பான் கொண்டு சீராக தெளிக்க வேண்டும். இதனால் பூ உதிர்வதை தடுக்கப்படுவதோடு 20 சதவிகிதம் அதிக மகசூலும் கிடைக்கிறது.

பருத்திக்கு பரிந்துரைக்கப்பட்ட அளவான ஏக்கருக்கு 2.5 கிலோ TNAU பருத்தி பிளஸ் உடன் தேவையான அளவு தண்ணீர் கலந்து பூ பூக்கும் மற்றும் காய் பிடிக்கும் பருவத்திலும் இழைவழி மூலம் தெளிப்பதன் மூலம் பூ உதிர்வதை தடுத்து காய் வெடிக்கும் தன்மை அதிகரிக்கிறது. மேலும் 15 சதவிகிதம் மகசூலும் அதிகரிக்கச் செய்கிறது.

மக்காச்சோளத்தில் பூ பூக்கும் பருவம் மன்றும் காய் பிடிக்கும் பருவத்தில் ஒரு ஏக்கருக்கு தேவையான 2.0 கிலோ மக்காச் சோள மேக்ஸிமை தேவையான அளவு தண்ணீர் சேர்த்து இலைவழி தெளிக்கும்போது வறட்சியை தாங்கி வளரும் தன்மை ஏற்படுவதோடு 15 சதவிகிதம் அதிக மகசூலும் கிடைக்கிறது.

நிலக்கடலையில் ஏக்கருக்கு 3 கிலோ கூகூபுரு நிலக்கடலை ரிச்சை தேவையான தண்ணீருடன் கலந்து இடும்பொழுது பூ உதிர்வது தடுப்பதோடு அதிக மகசூலுக்கும் வழிவகை செய்கிறது. மேலும் வளர்ச்சி ஊக்கிகளாகவும் செயல்படுகின்றது.

கரும்பு சாகுபடியில் TNAU கரும்பு பூஸ்டரை ஏக்கருக்கு 1 கிலோ என்ற அளவில் நட்டதிலிருந்து 45ம் நாளிலும், 1.5 கிலோ நட்டதிலிருந்து 60ம் நாளிலும், 2 கிலோ நட்டதிலிருந்து 75ம் நாளிலும் இலைவழி மூலம் தெளிக்கும் போது கரும்பின் வளர்ச்சி மற்றும் எடை அதகிகரிக்கின்றது. இனிப்பு சுகை அதிகரிப்பதோடு அதிக மகசூலும் கிடைக்கச் செய்கின்றது.

TNAU தென்னை டானிக்கில் தென்னைக்குத் தேவையான ஊட்டச்த்துக்கள் மற்றும் வளர்ச்சி ஊக்கிகள் இருக்கின்றன. ஒரு வருடத்திற்கு இரண்டு பாக்கெட்டுகள் (200 மி.லி) டானிக்கை 6 மாத கால இடைவெளியில் வேர் மூலம் அளிக்க வேண்டும். இதனால் பச்சையம் அதிகரித்து ஒளிச்சேர்க்கை, திறன் கூடும். குரும்பை உதிர்தல் குறைந்து காய்கள் பெரிதாகி பருப்பு எடை அதிகரிப்பதோடு விளைச்சலும் 20 சதவிகிதம் அதிகரிக்கும்.

ஒரு கிலோ பயறு ஒன்டர், நிலக்கடலை ரிச், காட்டன் பிளஸ், மக்காச்சோள மேக்ஸிம் மற்றும் கரும்பு பூஸ்டர், விலையானது முறையே ரூ.200, ரூ.200, ரூ.200, ரூ.300 மற்றும் ரூபாய் 350க்கு விற்கப்படுகிறது. தென்னை டானிக் ஒரு லிட்டர் ரூ.250க்கு விற்கப்படுகிறது. இவற்றை கோவையிலுள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள பயிர் வினையியல் துறையிலும், மதுரை வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் அமைந்துள்ள பயிர் வினையியல் துறையிலும் மற்றும் வேளாண்மை அறிவியல் நிலையத்திலும் பெற்றுக் கொள்ளலாம்.

மேலும் தகவல்களுக்கு விருதுநகர் வேளாண்மை அறிவியல் நிலைய முதுநிலை விஞ்ஞானி மற்றும் தலைவர் முனைவர் இராமசுப்பிரமணியன் மற்றும் தொழில்நுட்ப வல்லுநர் முனைவர் சீ.கிருஷ்ணகுமார் ஆகியோரை அணுகவும்.



# குறுவை நெல்லுக்கேற்ற ஒருங்கிணைந்த உர மேலாண்மை

திருச்சி, ஜூலை 16

திருச்சி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் தற்போது பரவலாக குறுவை நெல் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. இதனைக் கருத்தில் கொண்டுகுறுவை பட்டத்திற்கான குறுகிய கால நெல் சாகுபடியில் விவசாயிகள் மேற்கொள்ள வேண்டிய ஒருங்கிணைந்த உர மேலாண்மை தொழில்நுட்பங்களை சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலைய விஞ்ஞானிகள் கீழ் வருமாறு அறிவுறுத்து கின்றனர். நெல் சாகுபடிக்கு கடைசி உழவின் போது ஏக்கருக்கு 5 டன் மக்கிய தொழுஉரம் இட வேண்டும். சணப்பை, தக்கைப்பூண்டு போன்ற பசுந்தாள் உரங்களை நடவுக்கு பத்து நாட்களுக்கு முன் ஏக்கருக்கு 2.5 டன் என்ற அளவில் மடக்கி உழவேண்டும்.

மண் பரிசோதனையின் அடிப்படையில் மண்ணில் உள்ள சத்துக் களின் தன்மைக்கேற்ப தேவையான உரங்களை இடவேண்டும் அல்லது ஒருஏக்கருக்கு பொதுப் பரிந்துரை அளவான 60:20:20 கிலோ தழைச்சத்து, மணிச்சத்து, சாம்பல் சத்து இடவேண்டும். அதாவது ஒரு ஏக்கருக்கு 130 கிலோ யூரியா, 125 கிலோ சூப்பர் பாஸ்பேட் மற்றும் 33 கிலோ பொட்டாஷ் இடவேண்டும்.

- மணிச்சத்தின் முழு அளவையும் அடியுரமாக இடுதல் வேண்டும்.

- தழைச்சத்தும், சாம்பல்சத்தும் நான்கு பிரிவுகளாக முறையே கடைசி உழவின் போது, தூர்கட்டும் பருவம், கதிர் உருவாகும் பருவம் மற்றும் கதிர் வெளி வரும் பருவங்களில் இடப்படுதல் வேண்டும்.

- தூர்கட்டும் மற்றும் கதிர் உருவாகும் பருவங்கள் மிகவும் முக்கியமாக பயிர் வளர்ச்சி காலங்களாகும். அத்தருணத்தில் பரிந்துரைக்கப்பட்ட அளவு முறை குறையாமல் இடப்படுதல் மிகவும் முக்கியம்.

நுண்ணூட்டச் சத்தான துத்தநாக சல்பேட்டை ஒரு ஏக்கருக்கு அடியுரமாக 10 கிலோ இடவேண்டும். இதனை மற்ற உரங்களுடன் நேரடியாகக் கலக்கக் கூடாது. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் மூலம் நெல் ரீப் என்ற பயிர் பூஸ்டர் வெளியிடப்பட்டு உள்ளது. இது நெற்பயிருக்கு தேவைப்படும் பேரூட்டச் சத்துக்கள், நுண்ணூட்டச் சத்துக்கள் மற்றும் பயிர் வளர்ச்சி ஊக்கிகள் கலந்த பூஸ்டராகும்.

இந்த பூஸ்டரை இலைவழித் தெளிப்பாக ஏக்கருக்கு 6 கிலோ பூட்டைப் பருவம் மற்றும் முதல் தெளிப்பு செய்த 10 நாட்களுக்குப் பின் என ஏக்கருக்கு 3 கிலோ வீதம் இரண்டு முறை) அளவில் தெளிக்க வேண்டும். இதனை 200 லிட்டர் தண்ணீரில் ஒட்டும் திரவம் கலந்து தெளிக்க வேண்டும். இது நெற் பயிரில் ஏற்படும் மலட்டுத் தன்மையை குறைத்து மணி பிடிக்கும் திறனை அதிகரிக்கும். மேலும் வறட்சி மற்றும் உயர் வெப்பத்தை தாங்கும் திறன் அதிகரிக்கிறது.

மேற்கண்ட தகவல்களை வேளாண்மை அறிவியல் நிலைய விஞ்ஞானிகள் முனைவர் புனிதவதி, முனைவர் ராதிகா மற்றும் முனைவர் சகிலா ஆகியோர் தெரிவிக்கின்றனர்.



# சுய வேலை வாய்ப்புக்கு ஏற்ற நாட்டுக்கோழி வளர்ப்பு குறித்த சான்றிதழுடன் கூடிய ஒரு நாள் கட்டணப் பயிற்சி

கரூர், ஜூலை 16

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் கால்நடைப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச் சிமையம், கரூர் (மண்மங்கலம் அருகில், பண்டுதகாரன்புதூர்) சார்பில், "சுய வேலைவாய்ப்புக்கு ஏற்ற நாட்டுக் கோழி வளர்ப்பு" என்ற தலைப்பில் சான்றிதழுடன் கூடிய ஒரு நாள் உள்வளாக கட்டணப் பயிற்சி 23.07.26 (வியாழக்கிழமை) அன்று நடைபெறவுள்ளது.

இப்பயிற்சியில் விவசாயிகள், நாட்டுக்கோழி வளர்ப்போர், கால்நடைப் பண்ணையாளர்கள், சுயதொழில் தொடங்க விரும்பும் இளைஞர்கள், மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் மற்றும் நாட்டுக் கோழி வளர்ப்பை இலாபகரமான தொழிலாக மேற்கொள்ள விரும்பும் தொழில்முனைவோர் கலந்து கொண்டு பயனடையலாம்.

பயிற்சியின் போது தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் அனுபவமிக்க பேராசிரியர்கள் மற்றும் வல்லுநர்களால் நாட்டுக்கோழி வளர்ப்பிற்கான அறிவியல் தொழில் நுட்பங்கள் கற்றுத் தரப்படும். குறிப்பாக நாட்டுக்கோழி இனங்கள் மற்றும் அவற்றின் சிறப்புகள், குஞ்சு பராமரிப்பு, இருப்பிட மேலாண்மை, தீவன மேலாண்மை, நோய் தடுப்பு மற்றும் சுகாதார பராமரிப்பு, தடுப்பூசி அட்டவணை, இனப்பெருக்க மேலாண்மை, பண்ணை நிர்வாகம், சந்தைப்படுத்தல் மற்றும் சுயதொழில் வாய்ப்புகள் உள்ளிட்ட முக்கிய அம்சங்கள் குறித்து விரிவான பயிற்சி வழங்கப்படும்.

இப்பயிற்சியில் பங்கேற்பவர்களுக்கு தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் சார்பில் பயிற்சி சான்றிதழ் மற்றும் பயிற்சி கையேடு வழங்கப்படுவதுடன், மதிய உணவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேலும், நாட்டுக்கோழி வளர்ப்பை இலாபகரமான தொழில் முனைவாக மேற்கொள்ள விரும்புவோருக்கு தேவையான தொழில் நுட்ப ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டுதல்களும் வழங்கப்படும். பயிற்சிக் கட்டணம் ரூ.590 (18% GST உட்பட) ஆகும். முன்பதிவு செய்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

எனவே, இவ்வரிய வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொண்டு முன்பதிவு செய்து பயிற்சியில் கலந்து, நாட்டுக்கோழி வளர்ப்பின் நவீன அறிவியல் தொழில்நுட்பங்களை கற்றறிந்து, சுயதொழில்

மூலம் கூடுதல் வருமானம் ஈட்டும் தொழில்முனைவோராக முன்னேறுமாறு விவசாயிகள், இளைஞர்கள், மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் அழைக்கப் படுகிறார்கள். மேலும் விவரங்கள் மற்றும் முன்பதிவிற்கு 73390 57073 என்ற அலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

# நெல்லில் மேம்படுத்தப்பட்ட விதை உற்பத்தி தொழில்நுட்பங்கள் வெளிவளாக பயிற்சி



கடலூர், ஜூலை 16

நெல்லில் மேம்படுத்தப்பட்ட விதை உற்பத்தி தொழில்நுட்பங்கள் பற்றிய பயிற்சி 15.07.26 அன்று நல்லூர்வடதிடாரமதி, திருமலை அகரம் கிராமத்தில் நடைப்பெற்றது. இப்பயிற்சியில் மூத்த விஞ்ஞானி மற்றும் தலைவர் முனைவர் க.நடராஜன், வேளாண்மை அறிவியல் நிலையத்தின் முக்கிய குறிக்கோள்கள் மற்றும் அதிக மகசூல் தரும் உயர்தர இரகங்கள் பற்றியும், விதை உற்பத்தி செய்யும் முறைகள் பற்றியும் விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார். மேலும் விதை நேர்த்தி, உயிர் உரங்கள் பயன்பாடு, பசுந்தாள் உரங்கள் பயன்பாடு, சமச்சீர் உர மேலாண்மை, களை மேலாண்மை, நுண்ணூட்டச் சத்து பயன்பாடு பற்றியும் தெளிவாக விளக்கினார். நெல்லில் காணப்படும் பூச்சி நோய் தாக்குதலும் அதன் மேலாண்மை பற்றியும் ஒருங்கிணைந்த பயிர் பராமரிப்பு பற்றியும் தெளிவாக எடுத்துரைத்தார். த.வே.ப.க. இணையத்தள செயலிகள் பற்றி விளக்கம் அளிக்கப்பட்டது.

மேலும் மதிப்பு கூட்டப்பட்ட பொருட்கள் தயாரிக்கும் முறைகள் பற்றி விளக்கமாக கூறப்பட்டது. இறுதியாக விவசாயிகள், வேளாண் விஞ்ஞானிகளிடம் தனது ஐயங்களை கேட்டு தெளிவு பெற்றனர். மேலும் கிசான் சாரதியின் செயலி பயன்படுத்தும் முறைகள் பற்றி செயல்விளக்கம் அளிக்கப்பட்டது. பயிற்சியில் கடலூர் மாவட்ட சேர்ந்த நல்லூர் வட்டாரத்தில் உள்ள திருமலை அகரம் கிராமத்தில் உள்ள உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்தை சேர்ந்த 60க்கும் மேற்பட்டோர் கலந்துக் கொண்டு பயன் பெற்றனர். விகடகவி உழவர் உற்பத்தியாளர் நிறுவன தலைவர் கிருஷ்ணமூர்த்தி, இப்பயிற்சிக்கு ஏற்பாடு செய்தார்.


Rithvik Pipe
25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன்
கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்
தரச் சான்றிதழ் பேப்பரில் மட்டுமல்ல பைப்பிலும்
Rithvik Pipe
பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்
25 ஆண்டுகள் உத்தரவாதம்
நம்பிக்கைக்கு அடையாளம்
100% LEAD-FREE பைப்புகள்
ஆரோக்கியமான தண்ணீர்,
ஆரோக்கியமான வாழ்க்கை
ISI சான்று பெற்ற பைப்புகள்
தரத்திற்க்கு ஒரே அடையாளம்
ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும்
நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
67 GRADE மூலப்பொருட்கள்
அதிக வலிமை, நீண்ட ஆயுள்
TEST CERTIFICATE – QR CODE மூலமாக
ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக
பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
FREE ON-SITE TESTING
விற்பனைக்கு பின் தரம் உங்கள்
கண்முன்னே
சரியான எடை, தடிமன்
ஏமாற்றமில்லா தயாரிப்பு
PRODUCT RANGES
ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes)
ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80)
ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy)
ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG)
ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm
PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK
RITHVIK PIPES PROUDLY TRUSTED BY
LMW
isha
Office
Rithvik Pipe Company, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com
POWERGRID
BHEL
Factory
Rithvik Pipe Company, Opp.Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com
For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# பண்ணை பள்ளி – நெற் பயிரில் வேளாண் சூழலியல் பகுப்பாய்வு

திருவள்ளூர், ஜூலை 16

திருவள்ளூர் மாவட்டம், வேளாண்மை துறையின் கீழ் (அட்மா) மாநில விரிவாக்க திட்டங்களுக்கான உறுதுணை சீரமைப்பு திட்டத்தின் மூலம் பண்ணை பள்ளி – நெற்பயிரில் வேளாண் சூழலியல் பகுப்பாய்வு. பற்றி வேளாண் விஞ்ஞானிகள் மற்றும் வேளாண்மை உதவி இயக்குனர், ஆத்மா திட்ட பணியாளர்கள் இணைந்து பயிற்சிகளை நடத்தி வந்தார்கள்.

அம்பத்தூர் வட்டாரம், கரலப்பாக்கம் கிராமத்தில் பயிற்சியானது நடைபெற்ற போது, திரூர் நெல் ஆராய்ச்சி நிலையம், ம்ஷெ, சுரேஷ்குமார், விளக்கம் தெரிவித்தார், நெல் தமிழ்நாட்டின் முக்கிய உணவுப் பயிர்களில் ஒன்றாகும். நெற்பயிரில் பூச்சிகள் அல்லது நோய்கள் தென்பட்டவுடன் உடனடியாக பூச்சிக்கொல்லி மருந்துகளைப் பயன்படுத்துவது பல நேரங்களில் தேவையற்ற செலவையும், இயற்கை எதிரிகளின் அழிவையும் ஏற்படுத்தக் கூடும். இதற்கு மாற்றாக, வயலில் நிலவும் உண்மையான சூழலை ஆய்வு செய்து அதன் அடிப்படையில் பயிர் மேலாண் முடிவுகளை எடுக்கும் முறையே வேளாண் சூழலியல் பகுப்பாய்வு (Agro-Ecosystem Analysis - AESA) ஆகும். AESA முறையில் பயிரின் வளர்ச்சி, பூச்சிகள், இயற்கை எதிரிகள், நோய்கள், களைகள், மண் மற்றும் நீரின் நிலை, வானிலை போன்ற அனைத்து காரணிகளும் ஒருங்கிணைந்து ஆய்வு செய்யப்படுகின்றன. இதன் மூலம் தேவையான நேரத்தில் சரியான பயிர்ப் பாதுகாப்பு நடவடிக்கையை மேற்கொள்ள முடியும்.

**வேளாண் சூழலியல் பகுப்பாய்வு என்றால் என்ன?**

ஒரு நெல் வயலை தனித்தனியான பிரச்சினைகளின் தொகுப் பாகப் பார்க்காமல், பயிர், பூச்சி, இயற்கை எதிரி, மண், நீர், வானிலை ஆகியவை ஒன்றோடொன்று தொடர்புடைய உயிர்ச் சூழல் அமைப்பாகக் கருதி ஆய்வு செய்வதே AESA ஆகும்.

இதன் முக்கிய நோக்கம், வயலில் பூச்சி இருக்கிறதா? என்பதை மட்டும் கண்டறிவது அல்ல. மாறாக, பூச்சியின் எண்ணிக்கை எவ்வளவு?, அதை கட்டுப்படுத்த இயற்கை எதிரிகள் போதுமான

அளவில் உள்ளனவா?, பயிரின் ஆரோக்கியம் எப்படி உள்ளது?, உடனடியாக மேலாண்மை நடவடிக்கை தேவையா? போன்ற கேள்விகளுக்கு வயல் கண்காணிப்பின் மூலம் பதில் பெறுவதாகும்.

**AESA–வின் முக்கிய கூறுகள்**

**AESA மேற்கொள்ளும் போது பின்வரும் அம்சங்கள் கவனிக்கப்பட வேண்டும் :**

1. பயிரின் வளர்ச்சி மற்றும் ஆரோக்கிய நிலை
2. பூச்சிகளின் எண்ணிக்கை மற்றும் சேதத்தின் அளவு
3. இயற்கை எதிரிகளின் எண்ணிக்கை
4. நோய் தாக்குதல் மற்றும் அதன் தீவிரம்
5. களைகளின் வகை மற்றும் அடர்த்தி
6. மண்ணின் ஈரப்பதம் மற்றும் நீர் நிலை
7. அன்றைய மற்றும் முந்தைய வானிலை நிலவரம்
8. விவசாயியின் முந்தைய வயல் அனுபவம்

**நெல் வயலில் AESA மேற்கொள்வது எப்படி?**

வாரத்திற்கு ஒருமுறை குறிப்பிட்ட நாளில் வயலை முழுமையாகக் கண்காணிப்பது சிறந்தது. வரப்போரத்திலிருந்து மட்டும் வயலைப் பார்ப்பதைத் தவிர்த்து, வயலின் உட்பகுதிக்குச் சென்று பல இடங்களில் மாதிரிப் பகுதிகளைத் தேர்வு செய்ய வேண்டும்.

தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகளில் பறக்கும் பூச்சிகள், செடிகளில் காணப்படும் பூச்சிகள், முட்டைக் குவியல்கள், நோய் அறிகுறிகள், சேதமடைந்த தண்டுகள் மற்றும் இலைகள் ஆகியவற்றைக் கவனிக்க வேண்டும். அதே நேரத்தில் சிலந்திகள், பொறிவண்டுகள், தட்டான்கள் மற்றும் ஒட்டுண்ணிகள் போன்ற நன்மை செய்யும் உயிரினங்களையும் பதிவு செய்ய வேண்டும். மண்ணின் நிலை வெள்ளமாக உள்ளதா, ஈரமாக உள்ளதா அல்லது வறண்டுள்ளதா என்பதையும் கவனிக்க வேண்டும்.

நெற்பயிரின் ஆரோக்கியத்தை மதிப்பிடுதல்

AESA–வில் பயிரின் ஆரோக்கியமே முதன்மையானது. நெற்பயிரில் பின்வரும் அம்சங்களைத் தொடர்ந்து கண்காணிக்க வேண்டும் :

– செடியின் உயரம் மற்றும் வளர்ச்சி
– தூர்களின் எண்ணிக்கை
– இலைகளின் நிறம் மற்றும் ஆரோக்கியம்
– வேர் வளர்ச்சி
– கதிர்களின் எண்ணிக்கை மற்றும் வளர்ச்சி
– சத்து குறைபாட்டு அறிகுறிகள்
– பூச்சி மற்றும் நோய் சேதத்தின் அளவு

ஆரோக்கியமான பயிர் சில அளவிலான பூச்சிச் சேதத்தைத் தாங்கி மீண்டும் வளரக்கூடிய திறன் கொண்டது. எனவே, ஒரு சில பூச்சிகள் தென்பட்டவுடன் மருந்து தெளிப்பதைத் தவிர்த்து, பயிரின் உண்மையான சேதநிலையை மதிப்பிடுவது அவசியம். பூச்சிகளையும் இயற்கை எதிரிகளையும் இணைத்துப் பார்ப்போம்.

நெற்பயிரில் தண்டுத் துளைப்பான், இலைச்சுருட்டுப்புழு, பழுப்புத் தத்துப்பூச்சி, பச்சைத் தத்துப்பூச்சி மற்றும் கதிர் நாவாய்ப் பூச்சி போன்ற பல்வேறு பூச்சிகள் தாக்கக்கூடும். அதே வயலில் சிலந்திகள், பொறிவண்டுகள், தட்டான்கள், தரை வண்டுகள் மற்றும் பல்வேறு ஒட்டுண்ணிகள் போன்ற இயற்கை எதிரிகளும் காணப்படுகின்றன.

உதாரணமாக, நெல் தண்டுத்துளைப்பான் தாக்குதலில் இளம் பயிரில் "குருத்து காய்தல்" மற்றும் கதிர் பருவத்தில் "வெண் கதிர்" போன்ற அறிகுறிகள் காணப்படலாம். இத்தகைய சேத அறிகுறிகளுடன் பூச்சி மற்றும் இயற்கை எதிரிகளின் எண்ணிக்கையையும் சேர்த்து மதிப்பிட வேண்டும்.

### AESA வரைபடம் தயாரித்தல்

வயல் கண்காணிப்புக்குப் பிறகு சேகரிக்கப்பட்ட தகவல்களை ஒரு பெரிய தாளில் வரைபடமாகப் பதிவு செய்யலாம்.

**தாளின் மையத்தில் :** நெற்பயிரின் தற்போதைய வளர்ச்சி நிலை

**ஒரு பக்கத்தில் :** தீமை செய்யும் பூச்சிகள் மற்றும் நோய்கள்

**மற்றொரு பக்கத்தில் :** இயற்கை எதிரிகள்

**கீழ்பகுதியில் :** மண் ஈரப்பதம், நீர் நிலை, களைகள் மற்றும் வானிலை இதன் அடிப்படையில் விவசாயிகள் குழுவாகக் கலந்துரையாடி அடுத்த வாரத்திற்கான மேலாண்மை முடிவை

எடுக்கலாம். வயல் கண்காணிப்பு, தகவல்களை வரைபடமாகப் பதிவு செய்தல், பகுப்பாய்வு மற்றும் முடிவெடுத்தல் ஆகியவை புசிறீபு முறையின் முக்கிய பகுதிகளாகும்.

## AESA அடிப்படையில் எடுக்கப்படும் முடிவுகள்

வயல் ஆய்வின் முடிவில் பின்வரும் முடிவுகளில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவை எடுக்கப்படலாம் :

– உடனடி நடவடிக்கை தேவையில்லை; தொடர்ந்து கண்காணித்தல்
– இயற்கை எதிரிகளைப் பாதுகாத்தல்
– நீர் அல்லது உர மேலாண்மையைச் சரிசெய்தல்
– களை மேலாண்மை மேற்கொள்ளுதல்
– பாதிக்கப்பட்ட செடிகள் அல்லது பூச்சி முட்டைக் குவியல்களை அகற்றுதல்
– உயிரியல் அல்லது தாவரச் சார்ந்த மேலாண்மை முறைகளைப் பயன்படுத்துதல்
– பொருளாதார சேதநிலை அடிப்படையில் மட்டுமே தேவையான பயிர்ப் பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்ளுதல்

## AESA முறையின் நன்மைகள்

AESA முறையைத் தொடர்ந்து பின்பற்றுவதன் மூலம் தேவையற்ற பூச்சிக்கொல்லி பயன்பாட்டைக் குறைக்கலாம். நன்மை செய்யும் இயற்கை எதிரிகளைப் பாதுகாக்கலாம். சாகுபடிச் செலவைக் குறைத்து, சுற்றுச்சூழல் பாதுகாப்பை மேம்படுத்தலாம். மேலும், விவசாயிகள் தங்களது வயலின் சூழலைத் தாங்களே ஆய்வு செய்து அறிவியல் அடிப்படையில் முடிவெடுக்கும் திறனை வளர்த்துக் கொள்ள முடியும்.

## முடிவுரை

பூச்சியைக் கண்டவுடன் மருந்து தெளிப்பது அல்ல; வயல் சூழலைப் புரிந்து கொண்டு முடிவெடுப்பதே சிறந்த பயிர்ப் பாதுகாப்பு. நெற்பயிரில் வேளாண் சூழலியல் பகுப்பாய்வை வாரந்தோறும் மேற்கொள்வதன் மூலம் பயிரின் ஆரோக்கியம், பூச்சிகள், இயற்கை எதிரிகள் மற்றும் சுற்றுச்சூழல் காரணிகளை ஒருங்கிணைத்து மதிப்பிட முடியும். இதன் மூலம் தேவையற்ற ரசாயனப் பயன்பாட்டைக் குறைத்து, நிலையான மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த நெல் சாகுபடியை ஊக்குவிக்க முடியும் என்பதை தெளிவுபடுத்தினார்.


ஜெயின் நாற்றுகள்
சிறந்த மகசூல் - அதிக லாபம்
Jain Seedlings
PAPAYA
பப்பாளி
Rs. 16/-
ஒரு நாற்றின் விலை
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக.(உடுமலையிலிருந்து)
ரெட் லேடி
தைவான் 786
முன்பதிவு செய்வதற்கு
இன்றே அழையுங்கள்:
94425 02396